**தூத்துக்குடி மாவட்டத்தில் மாவட்ட சமூக நல அலுவலகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் காலிப்பணியிடங்கள் நேர்முகத்தேர்வு மூலம் நிரப்புதல் - தகுதியான நபர்களின் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத். இ.ஆ.ப அவர்கள் தகவல்.**

---

தூத்துக்குடி மாவட்டத்தில் மாவட்ட சமூக நல அலுவலகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பாலின நிபுணர்-1, தரவுப்பதிவாளர் - மிஷன் சக்தி திட்டம்-1 மற்றும் தரவுப்பதிவாளர் - பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா-1 ஆகிய 3 காலிப்பணியிடங்கள் பின்வரும் தகுதிகளின் அடிப்படையில் நேர்முகத்தேர்வு மூலம் நிரப்பப்பட உள்ளதால் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**பாலின நிபுணர்-1 - தகுதி**: சமூக அறிவியல், சமூகவியல்/இதர சமூகப்பணிகள் தொடர்பான துறைகளில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் பாலினத்தை மையமாகக் கொண்டு குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் இருக்க வேண்டும். மாத ஊதியம் ரூ.21,000/- வழங்கப்படும்.

**தரவுப்பதிவாளர் - மிஷன் சக்தி திட்டம்-1 மற்றும் தரவுப்பதிவாளர் - பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா-1 - தகுதி**: கணினி / தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். அரசு அல்லது அரசு சாரா தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்களில் மாநில அல்லது மாவட்ட அளவில் தரவு மேலாண்மை, செயல்முறை ஆவணங்கள் மற்றும் இணையதள அடிப்படையிலான செயல்பாடுகளில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அனுபவம் இருக்க வேண்டும். மாத ஊதியம் ரூ.20,000/- வழங்கப்படும்.

எனவே, விண்ணப்பதாரர்கள் தூத்துக்குடி மாவட்ட www.thoothukudi.nic.in என்ற இணையதளத்தில் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து மேற்காணும் தகுதிகளுடன் கூடிய கல்விச்சான்று, பணி முன் அனுபவச்சான்று, ஆதார் அட்டை, சாதிச்சான்று போன்ற ஆவண நகல்களுடன் இணைத்து விண்ணப்பத்தினை **15.07.2025-க்குள்** மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோரம்பள்ளம், தூத்துக்குடி - 628101 என்ற அலுவலக முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் தகவல்களுக்கு தொலைபேசிஎண்: 0461-2325606 என்ற எண்ணை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**விண்ணப்பப் படிவம்**

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை**

**மாவட்ட மகளிர் அதிகார மையம்**

**தூத்துக்குடி மாவட்டம்**

| விண்ணப்பதாரரின் புகைப்படம் |
|---|

விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்_________________________

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2. | விண்ணப்பதாரரின் தகப்பனார்/கணவர் பெயர் | : | |
| 3. | பிறந்த தேதி/வயது | : | |
| 4. | பாலினம் (ஆண்/பெண்) | : | |
| 5. | திருமணமானவர் ஆம்/இல்லை | : | |
| 6. | முகவரி | : | |
| 7. | தொலைபேசி எண் | : | |
| 8. | மின்னஞ்சல் முகவரி | : | |
| 9. | ஆதார் எண் | : | |
| 10. | கல்வித்தகுதி | : | |
| 11. | கூடுதல் தகுதி | : | |
| 12. | முன் பணி அனுபவ விவரம் | | |

இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் நகல்:

1. கல்வி சான்றிதழ்கள் (SSLC, HSC, UG & PG Degree Certificate)
2. முன் பணி அனுபவ சான்றிதழ்
3. ஆதார் அட்டை
4. கைவிடப்பட்ட ஆதரவற்ற மகளிருக்கான சான்றிதழ் (இருப்பின்)
5. சாதிச் சான்றிதழ்

விண்ணப்பதாரரின் கையொப்பம்